வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்- சரவண குமார்

தேதி 8.11.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு 6 நாள் அரசு முறைப் பயணமாக அங்கோலா, கோட்ஸ்வானா நாடுகளுக்கு இன்று புறப்பட்டார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உள்கட்டமைப்பு மேம்படுவதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், மணிப்பூரின் கைவினை கலைஞர்கள், விவசாயிகள் மற்றும் சிறு வணிகங்களுக்கு நிதி நிவாரணம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

சர்தார் வல்லபாய் பட்டேலின் 150-ம் ஆண்டு பிறந்தநாளையொட்டி ஒற்றுமை நடைபயணத்தை புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ் நாதன் தொடக்கி வைத்தார்.

*முர்மு*

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு 6 நாள் அரசு முறைப் பயணமாக அங்கோலா, கோட்ஸ்வானா நாடுகளுக்கு இன்று புறப்பட்டார். தமது பயணத்தின் ஒரு பகுதியாக இவ்விரு நாடுகளின் அதிபர்களுடன் இருதரப்பு பேச்சு வார்த்தைகளை அவர் மேற்கொள்கிறார். அந்நாடுகளின் நாடாளுமன்றத்தில் உரையாற்ற உள்ள குடியரசு தலைவர், அங்குள்ள இந்திய சமூகத்தினருடனும், கலந்துரையாடுகிறார். குடியரசு தலைவரின் ஆப்பிரிக்க நாட்டு பயணம் தென்னாடுகள் உடனான அவர்களின் நட்புறவை வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

*பிரதமர்-வந்தே பாரத்*

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உள்கட்டமைப்பு மேம்படுவதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தினார். உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில் 4 புதிய வந்தே பாரத் ரயில் சேவைகளை இன்று துவக்கி வைத்துப் பேசிய அவர் மேம்பட்ட சாலை, ரயில், போக்குவரத்து வசதிகளால் விரைவான வளர்ச்சி கண்டு வரும் நாடாக இந்தியா திகழ்வதாக கூறினார். நாட்டில் அடுத்த தலைமுறையினருக்கான மேம்பட்ட ரயில் சேவைகளை வந்தே பாரத், நமோ பாரத், அம்ருத் பாரத் ரயில்கள் வழங்குவதாக குறிப்பிட்டார். ரயில்வே துறையின் சீர்திருத்தங்கள் வெளிநாட்டு பயணிகளையும், வெகுவாக கவர்ந்துள்ளதாக அவர் பெருமிதம் தெரிவித்தார். வளர்ந்த நாடுகளில் கட்டமைப்பு மேம்பாடே அந்நாடுகளின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுத்ததாகவும் அவர் குறிப்பிட்டார். இன்று தொடங்கப்பட்ட பனாரஸ்-கஜூராகோ, பெரோஸ்பூர்-டெல்லி, லக்னோ-சகரன்பூர், எர்ணாகுளம்-பெங்களுரு, ஆகிய 4 ரயில் போக்குவரத்து சேவைகளோடு நாட்டில் இயங்கும் வந்தே பாரத் ரயில்களின் எண்ணிக்கை 160-ஆக உயர்ந்துள்ளது என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வின் ஒரு பகுதியாக பனாரஸ்-கஜூராகோ வந்தே பாரத் ரயிலில் பயணித்த சிறுவர்களுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்வில் ரயில்வே துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதனிடையே பிரதமர் துவக்கி வைத்த எர்ணாகுளம்-பெங்களுரு இடையிலான வந்தேபாரத் ரயில் இன்று கோவை ரயில் நிலையம் வந்த போது கல்லூரி மாணவர்கள், தொழில் துறையினர், உள்ளிட்ட அனைவரும் உற்சாக வரவேற்பு அளித்தனர். மேலும், பிரதமர் திரு நரேந்திர மோடி, சட்ட சேவைகள் நடைமுறைகளை வலுப்படுத்தும் தேசிய மாநாட்டை உச்சநீதிமன்றத்தில் இன்று மாலை துவக்கி வைத்து உரையாற்றுகிறார். சட்டசேவை கட்டமைப்பு குறித்த பல்வேறு அம்சங்கள் குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்படும்.

*பிரதமர்-உத்தராகண்ட்*

உத்தராகண்ட் மாநிலம் உருவானதன் வெள்ளி விழா கொண்டாட்ட நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை டேராடூன் செல்கிறார். இந்தப் பயணத்தின் போது, இந்த நிகழ்ச்சியைக் குறிக்கும் வகையில் நினைவு தபால் தலையை பிரதமர் வெளியிடுவதுடன், அங்கு மக்களிடையே உரையாற்றுகிறார். 8,000 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் மோடி தொடக்கி வைத்து நாட்டிற்கு அர்ப்பணிக்கிறார். இந்தத் திட்டங்கள் குடிநீர், நீர்ப்பாசனம், தொழில்நுட்பக் கல்வி, எரிசக்தி, நகர்ப்புற மேம்பாடு, விளையாட்டு மற்றும் திறன் மேம்பாடு உள்ளிட்ட பல முக்கிய துறைகளாகும். அம்ருத் - புத்துணர்ச்சி மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான அடல் மிஷன் திட்டத்தின் கீழ் 23 மண்டலங்களுக்கான டேராடூன் குடிநீர் விநியோகம், பித்தோராகர் மாவட்டத்தில் ஒரு துணை மின் நிலையம், அரசு கட்டிடங்களில் சூரிய மின்சக்தி நிலையங்கள் மற்றும் நைனிடாலில் உள்ள ஹல்த்வானி மைதானத்தில் ஒரு ஆஸ்ட்ரோடர்ஃப் ஹாக்கி மைதானம் உள்ளிட்டவை பிரதமரால் தொடங்கி வைக்கப்படவுள்ள முக்கிய திட்டங்களில் அடங்கும். டேராடூனுக்கு 150 மில்லியன் லிட்டர் குடிநீரை
வழங்கும் சோங் அணை குடிநீர் திட்டம் மற்றும் நைனிடாலில் உள்ள ஜமாராணி அணை பல்நோக்கு திட்டம் ஆகியவை அடிக்கல் நாட்டப்படும் திட்டங்களில் அடங்கும். மின் துணை மின் நிலையங்கள், சம்பாவத்தில் மகளிர் விளையாட்டுக் கல்லூரி அமைத்தல், நைனிடாலில் அதிநவீன பால்பண்ணை ஆலை உள்ளிட்ட திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்படும். பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 28,000-க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு ரூபாய் 62 கோடி நிதியுதவியை பிரதமர் நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்குகளில் செலுத்த உள்ளார்.

*குளிர்காலக் கூட்டத் தொடர்*

நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடர் அடுத்த மாதம் 1-ஆம் தேதி தொடங்க உள்ளதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ அறிவித்துள்ளார். அடுத்த மாதம் 19-ஆம் தேதி வரை

இக்கூட்டத் தொடர் நடைபெறும் என்று கூறி உள்ள அவர் இந்தக் கூட்டத் தொடர் ஆக்கப் பூர்வமாக நடைபெறும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார். நாட்டு மக்களின் விருப்பங்களை நிறைவேற்றும் வகையில் ஜனநாயகத்தை வலுப்படுத்தும் வகையிலும் குளிர்காலக் கூட்டத் தொடரை ஆவலுடன் எதிர்பார்த்து இருப்பதாக திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்தார்.

*ராதா கிருஷ்ணன்*

குடியரசு துணைத் தலைவர் திரு சி.பி. ராதாகிருஷ்ணன் நாளை கர்நாடகா மாநிலத்திற்கு பயணம் செல்கிறார். இந்த பயணத்தின் போது, அவர் ஹசனில் உள்ள ஜெயின் துறவியும் ஆன்மீகத் தலைவருமான ஆச்சார்ய சாந்தி சாகர் மகாராஜுக்கு மரியாதை செலுத்தி அங்கு நடைபெறும் மகாராஜின் சிலை நிறுவுதல் விழா மற்றும் நான்காவது மலையின் பெயரிடும் விழாவிலும் அவர் பங்கேற்கிறார்.

தொடர்ந்து, மைசூரில் உள்ள ஜே.எஸ்.எஸ் உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பதினாறாவது பட்டமளிப்பு விழாவில் திரு ராதாகிருஷ்ணன் கலந்து கொள்கிறார். கர்நாடகாவின் மிக முக்கியமான மடாலய மையங்களில் ஒன்றான சுத்தூர் மடத்தின் பழைய வளாகத்திற்கும் அவர் வருகை தந்து ஸ்ரீ சாமுண்டேஸ்வரி தேவி கோயில் மற்றும் செல்வநாராயண சுவாமி கோயிலிலும் துணை ஜனாதிபதி பிரார்த்தனை செய்ய உள்ளார்.

*ஜிஎஸ்டி -மணிப்பூர்*

பிரதமர் திரு நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்டு கடந்த செப்டம்பர் 22-ஆம் தேதி முதல் அமலாகி வரும் ஜிஎஸ்டி சேமிப்பு உற்சவம், சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயன் அளித்து வருகிறது. அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், மணிப்பூரில் பொருளாதாரம் எப்படியெல்லாம் ஊக்கம் பெற்று வருகிறது என்பது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு.....

(வாய்ஸ்)

புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், மணிப்பூரின் கைவினை கலைஞர்கள், விவசாயிகள் மற்றும் சிறு வணிகங்களுக்கு நிதி நிவாரணம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. திருத்தப்பட்ட வரி கட்டமைப்பின் கீழ், பேக்கேஜ் செய்யப்பட்ட காபிக்கான வரி விகிதங்கள் 18 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளன, இது மாநிலத்தின் காபி தொழில் முழுவதும் கணிசமான நிவாரணத்தை அளிக்கிறது. ஜிஎஸ்டி 2.0 இன் கீழ் இந்த குறிப்பிடத்தக்க வரிக் குறைப்புடன், காபி சாகுபடிக்கான முக்கிய மையங்களாக இருக்கும் உக்ருல், சேனாபதி மற்றும் சாண்டல் போன்ற மாவட்டங்கள் பயனடைகின்றன, ஏனெனில் இந்தத் துறை பதப்படுத்துதல், பேக்கேஜிங் மற்றும் விநியோக வலையமைப்புகளில் கூடுதல் வேலைவாய்ப்பை உருவாக்குகிறது. இதேபோல், ஊறுகாய், மூங்கில் தளிர்கள், பதப்டுத்தப்பட்ட உணவுகள், காய்கறி தயாரிப்புகள் போன்ற உணவுப் பொருட்களின் மீதான ஜிஎஸ்டி விகிதங்களும் 12 சதவிகித வரி 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளன, இது உற்பத்தியாளர்களுக்கு ஒரு பெரிய ஊக்கத்தையும் நுகர்வோருக்கு மலிவு சந்தை அணுகலையும் வழங்குகிறது. இதனுடன், மாநிலத்தில் உள்ள பல அத்தியாவசியப் பொருட்களின் மீதான ஜிஎஸ்டி இப்போது குறைக்கப்பட்ட வரியின் கீழ் வந்துள்ளது, இது உள்ளூர் தயாரிப்புகளை மிகவும் மலிவு விலையில் ஆக்குகிறது மற்றும் பிராந்திய தொழில்கள் மற்றும் வாழ்வாதாரங்களுக்கு ஊக்கத்தை அளிக்கிறது.

புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், மணிப்பூர் முழுவதும் அதிக தேவையை அதிகரிப்பதுடன், வேலைவாய்ப்பைப் பாதுகாத்தல் மற்றும் கிராமப்புற மற்றும் கைவினைப் பொருளாதாரத்தை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

*புதுச்சேரி-பட்டேல்*

சர்தார் வல்லபாய் பட்டேலின் 150-ம் ஆண்டு பிறந்தநாளையொட்டி மை பாரத் இயக்கம் சார்பில் புதுச்சேரியில் நடைபெற்ற ஒற்றுமை நடைபயணத்தை துணைநிலை ஆளுநர் கொடியசைத்து துவக்கி வைத்து மாணவர்களுடன் இணைந்து 4 கிலோ மீட்டர் நடைபயணம் மேற்கொண்டார்.

இதுகுறித்து ஒரு செய்தி தொகுப்பு............

(வாய்ஸ்)

சர்தார் வல்லபாய் பட்டேலின் 150-ம் ஆண்டு பிறந்தநாளையொட்டி மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம், மை பாரத் இயக்கம் சார்பில் ஒற்றுமை நடைபயணம் புதுச்சேரி சுதேசி மில் அருகே தொடங்கியது. இதில் சிறப்பு விருந்தினராக துணைநிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கலந்துகொண்டு ஒற்றுமை நடைபயணத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதில் சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம், உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், அமைச்சர் திரு ஜான்குமார், பாஜக சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளிட்ட தலைவர்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள் 1500-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு பாரம்பரிய கலை குழுவினர் நிகழ்ச்சிகளுடன் நடைபயணம் மேற்கொண்டனர். மாணவர்களுடன் இணைந்து துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன் 4 கிலோ மீட்டர் நடைபயணம் மேற்கொண்டார். இறுதியாக ஒற்றுமை நடைபயணம் கடற்கரை சாலை காந்தி திடலில் நிறைவுபெற்றது.

*பீகார்-பிரச்சாரம்*

பீகார் மாநிலத்தில் 122 சட்டப் பேரவை தொகுதிகளுக்கு 2-ஆம் கட்டமாக வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறும் வாக்குப் பதிவிற்கான பிரச்சாரம் நாளை மறுநாள் முடிவடைவதால் அரசியல் கட்சித் தலைவர்கள் உச்சகட்ட பரப்புரையில் ஈடுபட்டுள்ளனர். பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி சீதாமாரியில் தேர்தல் பொதுக் கூட்டத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டினார். காங்கிரஸ் மூத்த தலைவர் திருமதி பிரியங்கா காந்தி, கத்திஹார் மாவட்டத்தில் அக்கட்சி வேட்பாளர்களுக்கு வாக்கு சேகரித்தார். வாக்கு எண்ணிக்கை 14-ஆம் தேதி மேற்கொள்ளப்படும் என்பது குறிப்பிடத் தக்கது.

*அத்வானி*

பாஜக மூத்த தலைவரும் முன்னாள் துணைப் பிரதமருமான திரு எல் கே அத்வானியின் பிறந்த தினத்தை முன்னிட்டு தலைவர்கள் பலர்

வாழ்த்து தெரிவித்துள்ளனர். குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் நாட்டின் வளர்ச்சிக்காக தொலை நோக்கு பார்வையுடனும், அர்ப்பணிப்புடனும் பணியாற்றியவர் திரு அத்வானி என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் நாட்டின் வளர்ச்சிக்காக சுயநலமின்றி அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர் அவர் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் விடுத்துள்ள செய்தியில் நாட்டின் வளர்ச்சிக்காக தன் வாழ்வையே அர்ப்பணித்தவர் திரு எல் கே அத்வானி என்று புகழாரம் சூட்டி உள்ளார்.

*ஞா பாரதம்*

குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் இன்று சமண கையெழுத்து பிரதிகளை பாதுகாப்பாக வைத்திருந்ததற்காக அரசாங்கத்தின் ஞான பாரதம் மிஷனை பாராட்டினார். மேலும் பிரக்ருத்திற்கு செம்மொழி அந்தஸ்து வழங்கும் நடவடிக்கையையும் அவர் பாராட்டினார். புதுடெல்லியில் ஆச்சார்யா ஹன்ஸ் ரத்னா சூரிஷ்வர்ஜி மகாராஜின் 8-ஆவது 180 உபவாச பர்ண விழாவில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு கூறினார். அமைதிக்கும் உலகளாவிய அங்கீகாரத்திற்கும் சமண மதத்தின் ஆழ்ந்த பங்களிப்புகளை அவர் எடுத்துரைத்தார். தமிழ் இலக்கியம் மற்றும் கலாச்சாரத்தில் சமண மதத்தின் வரலாற்று செல்வாக்கையும் திரு ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

*நியுசிலாந்து*

இந்தியா-நியுசிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான 4-ஆவது சுற்றுப் பேச்சுக்கள் இன்று நிறைவடைந்தன. ஆக்லேண்ட் மற்றும் ரோட்டோரூவா-வில் கடந்த 5 நாட்களாக நடைபெற்ற இந்தப் பேச்சு வார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக மத்திய அரசின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது. இந்தியாவின் சார்பில் தொழில் மற்றும் வர்த்தக துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தலைமையிலான குழுவினரும், நியுசிலாந்து சார்பில் அந்நாட்டு வர்த்தக

துறை அமைச்சர் திரு Todd Mcclay தலைமையிலான குழுவினரும் இதில் பங்கேற்றனர்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு 6 நாள் அரசு முறைப் பயணமாக அங்கோலா, கோட்ஸ்வானா நாடுகளுக்கு இன்று புறப்பட்டார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உள்கட்டமைப்பு மேம்படுவதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், மணிப்பூரின் கைவினை கலைஞர்கள், விவசாயிகள் மற்றும் சிறு வணிகங்களுக்கு நிதி நிவாரணம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

சர்தார் வல்லபாய் பட்டேலின் 150-ம் ஆண்டு பிறந்தநாளையொட்டி ஒற்றுமை நடைபயணத்தை புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ் நாதன் தொடக்கி வைத்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

------------------------------